# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 17 ஆம் ஞாயிறு | 26 ஜூலை 2026
(உலக தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினம்)

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்:

சூழலியல் – நமது பொதுவான இல்லத்தைப் பராமரித்தல்



# ஞானத்தைப் பகிர்ந்தளித்தல், நமது பொது இல்லத்தைப் பாதுகாத்தல்

தாத்தா பாட்டி மற்றும் முதியோர் தினமான இன்று, நமது தாத்தா பாட்டி மற்றும் முதியவர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் அன்பு, தியாகங்கள் மற்றும் வழிகாட்டுதலுக்காக அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். அவர்களின் கதைகள், இறைவேண்டுதல்கள், மரபுகள் மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் மூலம், நம்மில் பலர் நம்பிக்கை, விடாமுயற்சி மற்றும் இறைவனின் படைப்புகளுக்கான மரியாதை ஆகியவற்றின் மதிப்பைக் கற்றுக்கொண்டோம். பூமியைப் பராமரிக்கும் நல்ல பொறுப்பாளர்களைப் போல, தாத்தா பாட்டிகளும் முதியவர்களும் எளிமையான வாழ்க்கை முறையை வாழவும் இயற்கையின் ஆசீர்வாதங்களைப் போற்றவும் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளனர்.

நாம் சாலமோன் அரசருடைய இடத்தில் இருந்திருந்தால், இறைவனிடம் என்ன கேட்டிருப்போம்? செல்வம், அதிகாரம் அல்லது நீண்ட ஆயுளுக்குப் பதிலாக, சாலமோன் ஞானத்தைக் கேட்கிறார் அதாவது நன்மைக்கும் தீமைக்கும் இடையில் பகுத்தறியும் திறனைக் கேட்கிறார். இந்தத் தாழ்மையான வேண்டுகோளால் இறைவன் மிகவும் மகிழ்ந்து, அவரது விருப்பத்தை, அதாவது உண்மையான மற்றும் நீடித்த மதிப்புள்ள ஒரு பரிசை அவருக்கு வழங்குகிறார். உண்மையான ஞானம் என்பது வெறும் அறிவு மட்டுமல்ல, அது இறைவனின் வழிகளின்படி வாழும் திறனாகும். அது உண்மையாகவே முக்கியமானவற்றை மதிக்க நமக்குக் கற்றுக்கொடுக்கிறது: அன்பு, நீதி, இரக்கம் மற்றும் ஒருவருக்கொருவர் மற்றும் நமது பொது இல்லத்தின் மீதான அக்கறை.

இரண்டாம் வாசகத்தில், புனித பவுல், கடவுளை அன்புசெய்பவர்களுக்கு எல்லாம் நன்மையாகவே நடக்கும் என்று நமக்கு உறுதியளிக்கிறார். நாம் கிறிஸ்துவின் சாயலாக வளரத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம், மேலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருக்கிறோம். கடவுளின் அருள் நம் இதயங்களையும் செயல்களையும் வடிவமைக்க நாம் அனுமதிக்கும்போது இந்த மாற்றம் நிகழ்கிறது. நமது தாத்தா பாட்டிகளும் முதியவர்களும் அமைதியான நம்பிக்கை துன்பத்தில் பொறுமை, மற்றும் வாழ்க்கையின் காலக்கட்டங்கள் முழுவதும் கடவுள் மீது நம்பிக்கை ஆகியவற்றின் மூலம் இதற்கு அடிக்கடி சாட்சி பகர்கிறார்கள்.

நற்செய்தியில், இயேசு கடவுளின் அரசைப் பற்றிப் போதிப்பதற்காக, இயற்கை மற்றும் அன்றாட வாழ்க்கையிலிருந்து மூன்று உவமைகளைக் கற்பிக்கிறார் அவை வயலில் மறைக்கப்பட்ட புதையல், விலையுயர்ந்த முத்து மற்றும் பல வகையான மீன்களைப் பிடிக்கும் மீன்பிடி வலை. வளமான மண்ணைப் போற்றும் ஒரு விவசாயியைப் போலவோ, அல்லது பிடிபட்ட மீன்களைக் கவனமாகப் பிரிக்கும் ஒரு மீனவரைப் போலவோ, எது உண்மையாகவே மதிப்புமிக்கது என்பதை அடையாளம் கண்டு, விவேகமாகத் தேர்ந்தெடுக்க நாம் அழைக்கப்படுகிறோம். கடவுளின் அரசு எந்தவொரு உலக செல்வத்தைவிடவும் மேலானது, மேலும் அதை முழு மனதுடன் தேடுமாறு நாம் அழைக்கப்படுகிறோம்.

வலை உவமையானது, கடந்த வார நற்செய்தியில் வந்த கோதுமை மற்றும் களைகளைப் போலவே, நன்மையும் தீமையும் உலகில் ஒருங்கே வாழ்கின்றன என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது. மனிதகுலம் மனந்திரும்பித் தம்மிடம் திரும்புவதற்கு இறைவன் பொறுமையுடன் கால அவகாசம் அளிக்கிறார். சீடர்களாகிய நாம், படைப்புக்கும் சமூகத்திற்கும் பாதுகாவலர்களாக இருக்க அழைக்கப்படுகிறோம்; நன்மையின் விதைகளை விதைத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, நம்பிக்கை மற்றும் பொறுப்புணர்வின் விழுமியங்களை வருங்கால சந்ததியினருக்குக் கடத்த வேண்டும்.

நம் முன்னோர்களின் ஞானத்திலிருந்து நாம் கற்றுக்கொண்டு, இறைவனின் படைப்பைப் போற்றி, எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் அரசில் புதையலைத் தேடுவோமாக.

Celebrate Listen Walk (cf Is 2:2-5)
MPC2026

## இன்றைய இறைவார்த்தை:

2 அரசர் 4: 8-11, 14-16
1 அரசர் 3: 5, 7-12
திருப்பாடல் 119: 57, 72, 76-77, 127-130
உரோமையர் 8: 28-30
மத்தேயு 13: 44-52 (அ) 13:44-46)

## இடமாற்றம் குறித்த அறிவிப்பு

உயர்மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் (API) சீரமைப்புப் பணிகள் நடைபெறவிருப்பதால் எதிர்வரும் ஜூலை 15, 2026 முதல் மேய்ப்புப்பணி மையத்தில் (APC) அமைந்திருக்கும் அலுவலகம் கோலாலம்பூர் , ஜலான் பீல், திரு இருதய ஆண்டவரின் ஆலய வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த இடமாற்றம் மறுஅறிவிப்பு வரும்வரை நடைமுறையில் இருக்கும்.

கூடுதல் விவரங்களுக்கு:
தொலைபேசி எண்:
016-366 9461

INTERNAL CIRCULATION ONLY
BUL 30/2026

**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org